Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 18, 2022

செவ்வாய்க்கிழமை ஜனவரி 18, 2022 | ஒளி: 07 கதிர்: 208 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



## ஜனாதிபதிக்கு மரியாதை வேட்டுகள் தீர்க்கப்படாது

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இன்று (18) காலை 10 மணிக்கு தொடர்ச்சி P2



## அபுதாபி விமான நிலையத்தில் 'ட்ரோன்' தாக்குதல்

### 2 இந்தியர்கள், 1 பாகிஸ்தானியர் பலி

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான அபுதாபியிலுள்ள புதிய சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் இரண்டு இந்தியர்கள், ஒரு பாகிஸ்தானியர் உள்ளிட்ட மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஆறுபேர் காயமடைந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று (17) இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் புதிதாக கட்டுமான பணி நடைபெற்று வரும் பகுதியிலுள்ள தளத்தில் மூன்று எரிபொருள் பவுஸர்கள் வெடித்து சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் அபுதாபியில் ட்ரோன்களால் ஏற்பட்ட இரண்டு தீ விபத்துகளை அதிகாரிகள் அறிவித்ததை அடுத்து, எமனின் ஈரானுடன் இணைந்த ஹவுதி இயக்கம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது தாக்குதல் நடத்தியதாக உரிமை கோரியுள்ளது. தொடர்ச்சி P2

## 21/4 விசாரணையில் நம்பிக்கை இல்லை

உயிர்த்த ஞாயிறு (21/4) தாக்குதல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் நம்பிக்கை இல்லையெனவும், அவ்விசாரணையில் எவ்விதமான நம்பிக்கையையும் கொள்ளமுடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். தொடர்ச்சி P2



அரசியல் நிபந்தனைகளை

# இந்தியா விதித்திருக்கலாம்



பெரும்பாலான நாடுகள் உதவி வழங்கும் போது, பல்வேறு துறைகளில் நிபந்தனைகளை விதிக்கின்றன என்றும் இந்தியாவும் நிதி வழங்குகையில் அரசியல் நிபந்தனைகளையும் விதித்திருக்கலாம் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டின் நலன்கள் மற்றும் அதன் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2


## ஆனந்தசங்கரிக்கு கொரோனா உறுதி

சுப்பிரமணியம் பாஸ்கரன், கனகராசா சரவணன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடல் சுகவீனம் அடைந்த நிலையில் நேற்று முன்தினம் (16) அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2





ஒமிக்ரான் மாறுபாட்டால்

## 5ஆவது கொரோனா அலை ஏற்படும் அபாயம்

கொரோனா வைரஸின் ஒமிக்ரான் மாறுபாடு காரணமாக நாட்டில் ஐந்தாவது கொரோனா அலை உருவாகும் அபாயம் காணப்படுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நீண்ட வார இறுதி விடுமுறையில் பொதுமக்களின் ஒன்றுகூடல் காரணமாக, அடுத்த இரண்டு வாரங்களில் பதிவாகும் நாளாந்த கொரோனா வைரஸ் தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் டொக்டர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். ஒமிக்ரான் மாறுபாட்டின் காரணமாக உலகம் முழுவதும் குறிப்பாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடாவில் நோய்த்தொற்று விகிதம் வெகுவாக அதிகரித்துள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார். தொடர்ச்சி P2

யாழ்ப்பாணத்தில் மலேரியாத் தொற்றுக்கான

## அபாயம் அதிகரிப்பு


எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணத்தில் மலேரியா தொற்று அபாயம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கு எடுத்துக்காட்டாக, நான்காவது மலேரியா நோயாளியும் அடையாளம் காணப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என அவ் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்படும் நோயாளிகள், தொடர்ச்சி P2





இ.மி.ச பொறியியலாளர் சங்கம்

## சுகவீன விடுமுறை போராட்டம்

சுகவீன விடுமுறையை அறிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கையை இன்று (18) முன்னெடுக்க இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. தொடர்ச்சி P2



## மேள தாளங்களுடன் வரவேற்பு...

கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில், கிளிநொச்சியில் நேற்று (17) காலை நடைபெற்ற கம்பன் கலைக்கூடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இரா. சாணக்கியன் உள்ளிட்டோர் மேள தாளங்களுடன் வரவேற்பட்டனர்.

(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)



## அரிசி மா:.பியாவுக்கான அரசாங்கத்தின் பதில்

பொலன்னறுவை அரிசி மாஃபியாவுக்கு பதிலளிக்கும் வகையில் அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள், தமிழ், சிங்கள புத்தாண்டுக்குள் ஒரு கிலோ கிராம் அரிசியை 300 ரூபாய்க்கு விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். தொடர்ச்சி P2

## ஆறரை இலட்சம் பேர் இரவில் பட்டினி



இலங்கையில் 650,000 தனிநபர்கள் இரவு உணவை உட்கொள்வதில்லை என்று சுகாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ, நேற்று (17) தெரிவித்தார்.


இந்தச் சூழ்நிலையில் பொதுமக்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வை எதிர்பார்த்து வருவதாகவும் கட்சி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேலும் கருத்து தெரிவித்த அவர், அரசாங்கம் தொடர்ந்தும் 5,000 ரூபாயை அச்சிட்டு விநியோகித்தாலும் தொடர்ச்சி P2

மின் வெட்டுக்கு தீர்வாக

## ஐஓசியிடம் எரிபொருள் பெறத் தீர்மானம்

நாட்டில் இடம்பெறும் மின் வெட்டுக்கு தீர்வாக, இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடம் (ஐஓசி) இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். தொடர்ச்சி P2

IOC Lanka IOC



## பிரத்தியேக வகுப்புகளுக்கு நள்ளிரவு முதல் தடை

2021ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. இந்நிலையில், அதற்காக, பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு இன்று (18) நள்ளிரவு 12 மணி முதல் முற்றாகத் தடை விதிக்கப்படவுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவருடன் ரிஷாட் பதியுதீன் எம்.பி சந்திப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்தியா விதித்திருக்கலாம்

வெளிநாட்டு நாடுகளைக் கையாளும் போது நாட்டில் கடுமையான திட்டம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார்.

சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நிதி பெறுவதற்காக அல்ல, பொருட்களைப் பெறுவதற்காக என தெரிவித்த அவர், ஆனால் இந்தியாவின் தனிச்சிறப்புக்கு ஏற்ப இந்தியா கடுமையான வழிகாட்டுதல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நிதியை வழங்குகிறது என்றார்.

# அபுதாபி விமான நிலையத்தில் ட்ரோன் தாக்குதல்

புதிய அபுதாபி விமான நிலையத்தில் எரிபொருள் ஏற்றிச் சென்ற மூன்று பவுஸர்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

மூன்று எரிபொருள் பவுஸர்களில் தீ மற்றும் வெடிப்பு ஏற்பட்டதாகவும், அதனையடுத்து புதிய விமான நிலையத்தின் கட்டுமான தளத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் அபுதாபி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 21/4 விசாரணையில் நம்பிக்கை இல்லை

பொரளையிலுள்ள தேவாலய வளாகத்தில் இருந்து கைக்குண்டொன்று அண்மையில் மீட்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் தன்மையை பார்க்குமிடத்து அந்த சந்தேகம் இன்னுமின்னும் வலுப்பெற்றுள்ளது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான விசாரணை குறித்து சமூகத்தில் கடும் சந்தேகம் உருவாகியுள்ளது. சந்தேகத்துக்கு இடமான முறையில் அரசாங்கம் நடந்துகொள்வது மற்றும் விசாரணைகளில் ஏற்பட்டிக்கும் தாமதம் இவற்றின் ஊடாக அவை நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரத்தியேக வகுப்புகளுக்கு நள்ளிரவு முதல் தடை

> பரீட்சைகள் திணைக்களத்திற்கோ முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

“பரீட்சை நிறைவடையும் வரை பரீட்சார்த்திகளுக்கு பிரத்தியேக வகுப்புக்களை ஏற்பாடு செய்வதற்கும் நடத்துவதற்கும் பாட இணை விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்துவதற்கும் முற்றாக தடை விதிக்கப்படவுள்ளது” என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ. தர்மசேன தெரிவித்துள்ளார்.

மேலும், பரீட்சைக்கான வினாக்களை அறியத்தருவதாகவோ அல்லது அதற்கு சமமான வினாக்களை வழங்குவதாகவோ தெரிவித்து சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்களை இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்களின் வாயிலாக பகிரங்கப்படுத்த அல்லது அவற்றை தம்வசம் வைத்திருப்பதற்கு தடை விதிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இக்கட்டளையை மீறி செயற்படுவோர் தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, பொலிஸ் தலைமையகத்திற்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்திற்கோ முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு மரியாதை வேட்டுகள் தீர்க்கப்படாது

சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. .இதன் நிமிர்த்தம் ஜனாதிபதிக்கு மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்படாது. அத்துடன் வாகன பேரணியும் இடம்பெறாது.

இன்றைய நிகழ்வை மிகவும் எளிமையான முறையில் நடத்துமாறு ஜனாதிபதி விடுத்துள்ள பணிப்புரையின் பிரகாரமே, மரியாதை வேட்டுக்கள் தீர்த்தலும் வாகன பவணியும் இடம்பெறாது என பாராளுமன்ற செயலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 33 (2) பிரிவின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதியக் கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

அதிதிகளின் வருகை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன், அதில் முதலாவதாக எம். பிக்களின் வருகையும் இடம்பெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வருகையின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வருகை தரவுள்ளார். பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான வாயிலுக்கு அருகில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க வரவேற்கவுள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்...

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இச்சந்திப்பின் போது நினைவுபடுத்தியதுடன் கடந்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியதற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், 'பயங்கரவாதத் தடைச் சட்டம் மூலம் கைது செய்யப்பட்டுள்ள, சிறைக் கைதிகளுடைய விடுதலை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அதிக அக்கறை செலுத்துகின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அநியாயமாக கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கின்ற தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பலர் தமது கைதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்குக் கூட பொருளாதார வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் எடுத்துரைத்தார்.

# ஆனந்தசங்கரிக்கு கொரோனா உறுதி

இந்த நிலையில், பிசிஆர் பிரிசோதனையும் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த பரிசோதனையிலும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளது. அதேவேளை, அவரது குடும்ப உறுப்பினர் மற்றும் இரு மெய் பாதுகாவலர்கள் மற்றும் சாரதி உள்ளிட்டவர்கள்தனிமைப்படு த்தப்பட்டுள்ளனர்.

வீ.ஆனந்தசங்கரியின் உடல்நிலையில் எவ்விதப் பாதிப்பும் இல்லை எனவும், அவரது வயதைக் கருத்தில் கொண்டு, யாழ். போதனா வைத்தியசாலையின் கொரோனா பிரிவில் நேற்று முதல் (17) தங்கவைக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகவீன விடுமுறைப் போராட்டம்

இலங்கை மின்சார சபை தலைவரின் நண்பரான புதிய பொது முகாமையாளருக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டத்தை நடத்தவுள்ளதாக பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சார சபையின் தலைவரின் விருப்பத்தின் பேரில் புதிய பொது முகாமையாளர் நியமனம் இடம்பெற்றுள்ளதாகவும் புதிய பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் ஓய்வுபெற்றவர் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் சார்பில் அமெரிக்க நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்தவர் என்றும் அவரது பதவிக்காலம் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். எனினும், இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கம் ஆதரவளிக்காது வழமை போன்று சேவையில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளது.

# அபாயம் அதிகரிப்பு

இள வயதினராக இருப்பதுடன், வேலை வாய்ப்புகளுக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முயன்று திரும்பி வந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“வட பகுதி இளைஞர்களுக்கு இவ்வாறு பயண ஏற்பாடுகளை பிரான்ஸில் உள்ள பயணமுகவர்கள் செய்கின்றனர். அவர்கள் மூலம் வட பகுதியில் உள்ளவர்கள் விமானம் மூலம் கட்டாருக்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கிருந்து கானா, ஐஸ்வரிகோஸ்ட் நாடுகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

“அந்த நாடுகளில் சுமார் 2 மாதங்கள் தங்கி இருந்துள்ளனர். அங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பயணித்தவர்கள் எமது பிரதேசத்துக்குத் திரும்பி வரும் போது மலேரியா தொற்றுடன் வருகின்றனர்.

“எனவே, மலேரியா நோய் பரவலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை நாம் அதிகரிக்க வேண்டும். எமது சுற்றுச்சூழலை நுளம்பு பெருகாது பாதுகாக்க வேண்டும். காய்ச்சல் உடையவர்களுக்கு மலேரியா நோய்க் கிருமிகள் தாக்கி உடையதா என குருதிப் பரிசோதனை செய்தல் அவசியம்.

“மேலும், மலேரியா அச்சமுள்ள நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்பவர்கள் அதற்குரிய தடுப்பு மருந்துகளை சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லல் அவசியம்” என்றும் பிரதிப் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

# 5 ஆவது கொரோனா அலை ஏற்படும் அபாயம்

இலங்கையிலும் நோய்த்தொற்றுகள் சிறிதளவு அதிகரித்துள்ளதாகவும் ஒமிக்ரோன் மாறுபாட்டின் அதிக பரவல் தன்மை காரணமாக நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

தடுப்பூசி திட்டத்தின் வெற்றியின் காரணமாக, கொரோனா வைரஸ் தொடர்பான மரணங்கள் எண்ணிக்கை மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை என்பன குறைந்துள்ளது என்றார். 20 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் 12-15 வயதுடைய பள்ளி மாணவர்களுக்கும் தடுப்பூசி போடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தடுப்பூசிகள் தொடர்பான தவறான தகவல்கள் பரவி வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இதுபோன்ற கூற்றுக்கள் அறிவியல் சோதனைகள் மூலம் சரிபார்க்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

எனவே வைரஸுக்கு எதிராக கணிசமான பாதுகாப்பை வழங்குவதால், அனைத்து நபர்களும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் வலியுறுத்தினார். அனைத்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுவர்களுக்கு தடுப்பூசி போடுவதை ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கொரோனா வைரஸின் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருப்பதால், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் புதிய மாறுபாடுகளை அடையாளம் காணும் பரிசோதனையைப் போல, நாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகங்களிலும் நடத்துவதற்கு வசதி செய்யுமாறு சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# அரிசி மா:பியாவுக்கான அரசாங்கத்தின் பதில்

நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேலும் தெரிவித்த அமைச்சர்,

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில், சில அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் மற்றும் அரிசிக்கு அதிக விலையை விதித்து அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

அமைச்சரவை அமைச்சர்கள் இந்த கவலையை எழுப்பியதுடன் அரிசிக்கு நிலையான விலை பேணப்பட வேண்டும் என்று ஒப்புக்கொண்டதாகவும், எனவே, அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அரிசி மாஃபியா நுகர்வோரை சுரண்டுவதைத் தடுக்கும் நடவடிக்கையாகவே அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எந்தவொரு நெருக்கடியுமின்றி அனைத்தையும் இறக்குமதி செய்த நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் தற்போதைய நடவடிக்கைகள் குறித்து தவறான கருத்துக்களை பரப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் நாட்டு அரிசியை 105 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க அனுமதிக்கப்பட மாட்டாது எனவும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 130 ரூபாவாகவே பேணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிவாரணப் பொதி வெறும் தோற்றம் என்று சில குழுக்கள் கூறுவதாகவும் 10 கிலோ அரிசி மற்றும் 20 பொருட்கள் பொதியில் 3,998 ரூபாய்க்கு கிடைக்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

444 சதொச விற்பனை நிலையங்கள் மாத்திரமே உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாகவும் எந்தவொரு தனிநபரும் 1998 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு 48 மணி நேரத்துக்குள் நிவாரணப் பொதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

# ஆறரை இலட்சம் பேர் இரவில் பட்டினி

சனத்தொகையில் 7 சதவீதமானோர் மட்டுமே அரச துறை ஊழியர்களாக உள்ளனர் என சுட்டிக்காட்டினார்.

ரூ.5,000 கொடுப்பனவால் ஏனைய மக்களுக்கு எந்த மதிப்பும் இல்லை என்றும் அதிகரித்து வரும் பொருட்களின் விலையால் மக்கள் எப்படி வாழ முடியும் என கேள்வி எழுப்பினார்.

மேலும், எதிர்வரும் தேர்தலில் தனிக் கூட்டணியாக போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# ஐஓசியிடம் எரிபொருள் பெற தீர்மானம்

அமைச்சர் கம்மன்பில குறிப்பிடும் 80 தொடக்கம் 90 பில்லியன் ரூபாய் கடன் எமது அரசாங்கத்தின் கீழ் இல்லை என்று தெரிவித்த அமைச்சர், எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்று வழிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எதிர்வரும் நாட்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இந்த கலந்துரையாடல் இன்று (18) இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவை ஏற்படின் இந்த கலந்துரையாடலில் பங்கேற்பதற்குத் தாம் தயாராகவுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்படும் எரிபொருள் இன்று (18) காலை வரை மட்டுமே போதுமானது என இலங்கை மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது. டீசல் அவசர தேவையாக இருப்பதால், மின்சார சபைக்கு டீசல் வழங்கப்பட்டதாகவும், அதேசமயம், மின்சார சபை உடனடி தீர்வை வழங்காவிட்டால், மின்வெட்டு காலத்தை நீட்டிக்க வேண்டிவரும் என்றும் சபை குறிப்பிட்டது.

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# அரசாங்கத்துக்கு முஜிபூர் எம்.பி சவால்

ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர்களை கைது செய்து சட்டத்தை அமுல் படுத்துவோம் என முடிந்தால் மக்களுக்கு உறுதியளிக்குமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரகுமான் தெரிவித்தார்.

கொழும்பு மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர்களைக் கைது செய்வதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அதைச் செய்யக்கூடிய நிலையில் உள்ளதா அல்லது அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லையா என்ற கேள்வி சமூகத்தில் பேசப்படுகிறது என்றார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்து இன்று ஆயிரம் நாட்கள் கடந்துவிட்ட நிலையில், சஹாரானின் கும்பலின் முக்கிய சந்தேகநபரான சாரா ஜஸ்மின் புலஸ்தினி மகேந்திரனைப் பிடிக்க அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் கேள்வியெழுப்பினார்.

சாரா இன்னும் உயிருடன் இருப்பதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவளைக் கைது செய்ய உதவுமாறு அரசாங்கம் இன்டர்போலுக்கு அறிவித்துள்ளதா என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம் என தெரிவித்தார்.





## மருமகனுக்கு 365 கொடுத்த மாமியார்

வீட்டிற்கு வந்த வருங்கால மருமகனுக்கு ஒரு வருடத்தில் மொத்தம் 365 நாள்கள் இருப்பதைக் கணக்கில் கொண்டு, 365 வகையான உணவுகளை அவரது மாமியார் வழங்கிய சம்பவம் ஆந்திராவில் இடம்பெற்றுள்ளது.

பொதுவாகத் திருமணத்திற்குப் பின்னர் மணப்பெண் வீட்டிற்குச் செல்லும் மாப்பிள்ளைக்கு நல்ல உபசரிப்பு கிடைக்கும். அப்படியொரு சம்பவம் தான் இப்போது ஆந்திராவில் நடந்துள்ளது.

இங்கு ஆந்திராவில் வருங்கால மாப்பிள்ளைக்கு அளிக்கப்பட்ட உபசரிப்பு அனைவரும் ஆச்சரியப்படுத்தும் வகையில் உள்ளது. இது தொடர்பாக புகைப்படங்கள் இணையத்தில் வைரலாக பரவி வருகின்றன

ஆந்திராவில் வீட்டிற்கு வந்த வருங்கால மருமகனுக்கு அவரது மாமியார் 'மெகா' உபசரிப்பை அளித்துள்ளார். ஒரு வருடத்தில் மொத்தம் 365 நாள்கள் இருப்பதைக் கணக்கில் கொண்டு, 365 வகையான உணவுகளை வருங்கால மருமகனுக்கு வழங்கியுள்ளார்.

இது குறித்து பெண் வீட்டார் கூறுகையில், "எங்கள் வருங்கால மருமகன் மீதான எங்கள் அன்பைக் காட்ட, ஒரு வருடத்தில் 365 கணக்கிட்டு அதற்கேற்ப 365 வகையான உணவுகள் ஏற்பாடு செய்துள்ளோம்" என்றார்கள்.

ஆந்திராவின் மேற்கு கோதாவரி மாவட்டம் நரசாபுரத்தில் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த சாய்கிருஷ்ணா என்பவர், தங்க வியாபாரியான வெங்கடேஸ்வர ராவ் -மாதவி தம்பதியின் மகள் குந்தவி ஆகியோருக்கு திருமணம் நடைபெறவுள்ளது. இன்னும் சில வாரங்களில் இவர்களுக்குத் திருமணம் நடைபெறுகிறது. இதனிடையே மகர சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு வீட்டிற்கு வந்த தங்களின் வருங்கால மருமகனுக்கு இந்த பிரம்மாண்ட விருந்தை அவரது மாமியார் அளித்துள்ளார்.

திருமணத்திற்கு முன் பெண்ணின் தாத்தா-பாட்டி தங்கள் பேத்தியைத் திருமணம் செய்து கொள்ளும் இளைஞனுக்கு விருந்து அளிக்க ஏற்பாடு செய்தனர். அப்போது பெண்ணின் பெற்றோரும் இதில் தலையிட அது மிகப் பிரம்மாண்டமான விருந்தாக மாறிவிட்டது.

இந்நிகழ்ச்சிக்காக 30 வகையான குழம்பு, சாதம், பிரியாணி, பாரம்பரிய கோதாவரி இனிப்புகள், சூடான மற்றும் குளிர் பானங்கள், பிஸ்கட், பழங்கள், கேக் எனச் செய்யப்பட்டு மாப்பிள்ளைக்கு அளிக்கப்பட்டன.

பொதுவாகவே கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் அன்பான விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள்.

அதேநேரம் கொரோனா காலத்தில் பலரும் உணவின்றி தவித்து வரும் நிலையில், ஒரு நபருக்கு எதற்கு இத்தனை வகையான உணவுகள் என்றும் இவற்றை அங்குள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கியிருக்கலாம் என்றும் சில நெட்டிசன்கள் தெரிவித்துள்ளனர்.

பி.சி.ஆர் தொகுதிகள் கொள்வனவில்

# பல மில்லியன் மோசடி



முல்லேரியா மருத்துவ ஆய்வுக்கூடத்தில் உள்ள பி.சி.ஆர் தொகுதிகளில் 40 மில்லியன் ரூபாய் மோசடி இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்த சுகாதார தொழிற்சங்கத்தின் தொழில் வல்லுநர்களின் சங்கத் தலைவர் ரவி குமுதேஸ், 250 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இரசாயன கூடத்தில் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் கூட இல்லை என்றார்.

இரசாயன கூடத்துக்கு பொறுப்பான பணிப்பாளர், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் அத்தியாவசிய தரப்பினரைத் தவிர்ப்பதற்காக தேசிய பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கும் சர்வதேச பயிற்சி தேவையில்லை எனத் தெரிவித்து, அவரது தேவைக்காக இரசாயன கூடத்தை செயற்படுத்துவதாகவும் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுகாதார வரலாற்றில் பெருமளவு நிதி செலவில் அமைக்கப்பட்டுள்ள முல்லேரியா பி.சி.ஆர் கூடமானது, வெள்ளை யானையாக மாறியுள்ளது.

இந்த இரசாயன கூடத்தின் பயன்பாட்டுக்காக கடந்தாண்டு மே மாதம் பெறப்பட்ட பி.சி. ஆர் தொகுதி ஒன்றுக்கு 15 டொலர் அதிகமாக செலுத்தப்பட்டது எனத் தெரிவித்த அவர், தேசிய நிறுவனம் ஒன்று இல்லாமல் அத்தகைய கொள்வனவை செய்யும் போது, பாரிய மோசடிகள் இடம்பெறுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.







## தைப்பூசத் திருவிழா...

தெல்தெனிய, மொரகஹமுல்ல ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா ஆலய பரிபாலன சபையின் தலைவர் எஸ். முத்தையா தலைமையில் நேற்று (17) இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாண சபை முதலமைச்சர் சரத் ஏக்கநாயக, உலக சைவ ஒன்றியத்தின் தலைவர் இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சிவன் கோவிலுக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

(படங்கள்: இக்பால் அலி)

கறவை பசுக்கள் இறக்குமதியில் மோசடி

## அரசாங்கத்துக்கு மற்றுமொரு சுமை

### கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

15,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்காக, 1,750 மில்லியன் ரூபாய் ஒப்பந்த அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட போதிலும், ஒரு பசுவேனும் இதுவரை இறக்குமதி செய்யப்படவில்லை என்பது தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஹாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சால் இறக்குமதி செய்து, சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்காமை தொடர்பிலான விவரங்களை தேசிய கணக்காய்வு அலுவலக தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

2018ஆம் ஆண்டு வெளிநாடொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மூலம் ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிக கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதன் காரணமாக இந்தத் தொகையுடன் கடனுக்கான வட்டியையும் சேர்த்து ரூபாய் மதிப்புக்குறைவால் ஏற்படும் நட்டத்தையும் ஏற்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக கண்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் அலுவலக அதிகாரியின்

## கை விரல்களை கௌவிய மலைப்பாம்பு

ஹிரான் பிரியங்கர



புத்தளம் வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு, காட்டில் விடுவதற்காக கொண்டு செல்லப்பட்ட மலைப்பாம்பு, அதிகாரி ஒருவரைக் கடித்துள்ளது.

10 அடி நீளமான மலைப்பாம்பானது, புத்தளம் பிரதேசத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான இடமொன்றில் காணப்பட்டது. வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் (16) பிடிக்கப்பட்டு, காட்டில் விடுவதற்காக, வனஜீவராசிகள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று (17) காலை குறித்த மலைப்பாம்பை ஒரு கூண்டில் இருந்து இன்னொரு கூண்டுக்குள் மாற்ற தயாரானபோது, அதிகாரியொருவரின் கை விரல்களை கௌவிப் பிடித்துள்ளது.

எனினும், அங்கிருந்த ஏனைய அதிகாரிகள் மலைப்பாம்மை பிடித்து கூண்டுக்குள் போட்டுள்ளதுடன், காயமடைந்த அதிகாரியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தேசிய பொங்கல் விழா

## புத்தளத்தில் நடைபெறவுள்ளது

ரஸீன் ரஸ்மீன்



ஒவ்வொரு வருடமும் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தேசிய தைப்பொங்கல் விழா, இம்முறை புத்தளம் மாவட்டத்தின் உடப்பு பிரதேசத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை தலைவர் கே.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி இந்தத் தேசிய பொங்கல் விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ, இளைஞர் விவகார , விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை, முந்தல் பிரதேச செயலகம் என்பனவற்றின் ஒத்துழைப்பில் இந்தத் தேசிய தைப்பொங்கல் விழா நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவுக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக 6 - 8 வரையான மாணவர்கள் வீதம் கலை நிகழ்ச்சிக்காக அழைத்து வரப்படவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக விழா நாளன்று கொழும்பிலிருந்து தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி வடிவமைப்பு செய்யப்பட்ட ரயில் புத்தளம் நோக்கி வருகை தரவுள்ளது. அத்துடன், உடப்பு பெரிய கோவிலில் விஷேட பூசையும், பொங்கல் பொங்கும் நிகழ்வும், உடப்பு பெரிய பாலத்திற்கு அருகே கலாசார நிகழ்வுகளும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

12 மணி நேரத்தில்

## ரூ. 28 இலட்சம் வருமானம்



மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) இந்த மாதம் 15ஆம் திகதி, ஜனாதிபதி, பிரதமர் தலைமையில், பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

"நெடுஞ்சாலை திறக்கப்பட்ட முதல் 12 மணிநேரத்தில் அதாவது நேற்று முன்தினம் (16) நண்பகல் 12 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணிவரை 28 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைத்துள்ளது" என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த நெடுஞ்சாலையில், 12 மணி நேரத்துக்குள் 13,583 வாகனங்கள் பயணித்துள்ளன. விபத்துகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நெடுஞ்சாலை திறந்து வைக்கப்பட்ட 15ஆம் திகதி நள்ளிரவு முதல், 16ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை மீரிகமவிலிருந்து குருநாகல் வரை கெட்டுவான நுழைவாயில் வரையிலும், கெட்டுவானவிலிருந்து மீரிகம வரையிலும் பொதுமக்களுக்கு இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

11 வயது சிறுமி துஷ்பிரயோகம்

## 'டிக் டொக் சமன்' உள்ளிட்ட ஐவர் கைது



11 சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 'டிக் டொக் சமன்' கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சிறுமியை ஏமாற்றி விருந்துபசாரம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ள அவ்விளைஞன், அச்சிறுமிக்கு போதைப் பொருளை கொடுத்து, பலமுறை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 'டிக் டொக் சமன்' உள்ளிட்ட நால்வரும் யுவதியும் தலங்கம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சிறுமியின் தாயும் தந்தையும் விசேட தேவையுடையவர்களாவர்.

ஜனவரி முதலாம் திகதி தெஹிவளை பிரதேசத்தில் நடைபெறும் விருந்துபசாரம் ஒன்றுக்கு சென்று வருவதாக சென்ற சிறுமி, வீடு திரும்பாமையால், பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு செய்யப்பட்ட அன்று, நேரம் தாமதித்து வீட்டுக்கு வந்துள்ள நிலையில், இவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட பொலிஸார், சிறுமியை முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதித்த போதே, சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

## அதிகமானோர் ரஷ்யாவிலிருந்து வருகை



இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் மட்டும் 39,172 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அதில் 6,963 பேர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று பரவிய கடந்த வருடத்தில் 1,94,495 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், கடந்த 3 மாதங்களில் மட்டும் 1,56,571 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். ரஷ்யாவைத் தவிர, இந்தியா, உக்ரைன், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், மாலைதீவு, அவுஸ்திரேலியா, போலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அரசாங்கம் மக்களின் இறையாண்மையை

## காலால் எட்டி உதைக்கின்றது

ஜீட் சமந்த



மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவது, மக்களின் இறையாண்மையை காலால் எட்டி உதைக்கும் செயற்பாடாகும் என, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டியா பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மாகாண சபைத் தேர்தல் அரசாங்கத்தால் பிற்போடப்பட்டு வருகின்றது. தேர்தல் என்பது மக்களின் உரிமையாகும். அந்த மக்களின் உரிமைகளை காலால் எட்டி உதைக்கவும் இல்லாமல் செய்யவும் அரசாங்கத்துக்கு உரிமை இல்லை.

இந்தக் காலகட்டத்தில் தேர்தலை வைப்பது பாதகமாகும் என அரசாங்கத்துக்கு தெரியும். அதனால் தான் அரசாங்கம் தேர்தலை நடத்த பின்நிற்கின்றது என்றார்.

அக்கரைப்பற்றில் பாடசாலை

# மாணவிகளுக்கு இடைஞ்சல்

## சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பெரும் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட், நேற்று (17) தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேச பாடசாலைகளில் குறிப்பாக பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று இடைஞ்சல் செய்வதோடு, அலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, சில மாணவிகள் இடைநடுவில் கல்வியை கைவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக நீதிமன்றினூடாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

சிறுமியுடன் குடும்பம் நடத்திய

# இளைஞனுக்கு விளக்கமறியல்

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் 13 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த 23 வயது இளைஞன், 14 நாள்கள் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார் என மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, மாங்குளம் பகுதியில் உள்ள ரயர் கடை ஒன்றில் வேலை செய்வதற்காக திருகோணமலையை சேர்ந்த இளைஞன் வருகை தந்துள்ளனர்.

அவர் தங்குவதற்காக மாங்குளம், புதிய கொலனி கிராம மட்ட அமைப்புகளின் பரிந்துரையுடன், வீடு ஒன்றும் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருகோணமலை, மூதூர் பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன், அதே பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது சிறுமியையும் அவரின் விருப்பத்தின் பேரில் அழைத்துவந்து சுமார் ஒரு மாதகாலமாக குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளார்.

இது தொடர்பிலான தகவல், புதிய கொலனி பகுதியில் கிராமத்தில் அரசல் புரசலாக பேசப்பட்டது.

சம்பவம் வெளியில் தெரியவந்துள்ளமையைத் தொடர்ந்து, சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் இளைஞனை மாங்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞன், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் பதில் நீதிபதி வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் (16) முன்னிலைப்படுத்தப்பட்டபோது, 14 நாள்கள் விளக்கமறியல் வைக்க உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள், மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஆதிவாசிகளின் பொங்கல்...

ஆதிவாசிகளின் பொங்கல் விழா, அவர்களுக்குரிய கலாசார நிகழ்வுகளுடன், ஆதிவாசிகளின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தலைமையில், வாகரை, குஞ்சங்கல் குளத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

(படப்பிடிப்பு: ஆர். ஜெயஸ்ரீராம்)

உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன்

# பிரதேச சபை ஊழியர் கைது

■ எப்.முபாரக்

திருகோணமலை, ரொட்டவெவ பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை, நேற்று முன்தினம் (16) இரவு கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மொரவெவ பிரதேச சபை ஊழியர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலையடுத்து, சேனை காவலுக்காக சந்தேகநபர் சென்ற போது, அவரைப் பின் தொடர்ந்து அவர் தங்கியிருந்த குடிசையை சோதனையிட்ட போதே, மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, திருகோணமலை நீதவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றுக்குள் விழுந்து

# சிறுவன் உயிரிழப்பு

■ நூருல் ஹுதா உமர்

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பள்ளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.இன்ஸான் என்ற 5 வயதுச் சிறுவன், நேற்று முன்தினம் (16) பிற்பகல் 5 மணியளவில் கிணற்றுக்குள் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நிந்தவூர் 10, அட்டப்பள்ளம், சமாதான கிராமத்தில் வசித்து வரும் இச்சிறுவன், தனது குடும்பத்தாருடன் பொழுதுபோக்குக்காக அட்டப்பள்ளம் கடற்கரைக்குச் சென்றுள்ளார். இதன்போது கடற்கரைப் பிரதேசத்தில் ஏனைய சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது, தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கல்முனையில்

# மீண்டும் கொரோனா மரணங்கள்

■ எம்.எஸ்.எம். ஹனீபா, சகா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்-19 தொற்றால் இருவர், நேற்று முன்தினம் (16) மரணமாடைந்துள்ளனர் என, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.



சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 58 வயதுடைய பெண் ஒருவரும் கல்முனை தெற்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட மாதவன் வீதியில் வசித்து வந்த 74 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு மரணடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களில் சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பெண், எதுவித கொவிட்-19 தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், மற்றைய பெண், இரண்டு சினோபாம் தடுப்பூசிகளை மாத்திரம் பெற்றுக் கொண்டவர் எனவும் இவர், கொவிட் நியூமோனியா நோயால் உயிரிழந்துள்ளார் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, "பொதுமக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும். அடுத்த மரணம் உங்கள் கதவுகளையும் தட்டும். எனவே, சுகாதார சட்ட விதிமுறைகளை இறுக்கமாக பின்பற்றவேண்டும். எல்லோரும் ஒன்றிணைந்து கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என சுகாதார தரப்பினரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இம்மாதம் 01ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை 81 பேர், கொவிட்-19 தொற்றாளர்களாக இனங்கணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்வெட்டு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அவசரத் திருத்த வேலை காரணமாக, கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இன்று (18) கல்முனை, சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட வைத்தியசாலை வீதி இருந்து தாளவெட்டுவான் வீதி, மணல்சேனை, மருதமுனை, துரவந்தியமேடு, பெரியநீலாவனை, பாண்டிருப்பு, சென்னல்கிராமம், மலையடிகிராமம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

21ஆம் திகதி, மைகாட்டியில் இருந்து நைனாகாடு பகுதிகளிலும் 29ஆம் திகதி, சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடை அமலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.



## கலைக்கூடத்துக்கான அடிக்கல்...

கம்பன் கலைக்கூடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில், கிளிநொச்சியில் நேற்று (17) காலை நடைபெற்றது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எம். ஏ சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், இரா. சாணக்கியன், யாழ். மாநகர சபை மேஜர் மணிவண்ணன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர்.

(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)

வாள்வெட்டில்

# இளைஞன் படுகாயம்

■ எஸ்.தில்லைநாதன்

வடமராட்சி, துன்னாலை கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் (16) மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் வின்சன் (வயது- 23) என்ற இளைஞனே தலைப் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இசைக்கருவிகள் வழங்கிவைப்பு

■ விஜயரத்தினம் சவணன்

பாடசாலைகளில் நடைபெறும் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில், வள நிரப்பலை நோக்காகக் கொண்டு, 'கல்விச்செழுமை' எனும் செயற்றிட்டத்தை, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வகையில், கள்ளப்பாடு, றோயல் முன்பள்ளியால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக, 50,000 ரூபாய் பெறுமதியான இசைக்கருவிகள் குறித்த கள்ளப்பாடு றோயல் முன்பள்ளிக்கு, கல்விச்செழுமை செயற்றிட்டத்தினூடாக ரவிகரனால் வழங்கப்பட்டன.

கள்ளப்பாடு றோயல் முன்பள்ளியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளியின் தலைவர் ஆகியோர் ரவிகரனிடமிருந்து இசைக்கருவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த இசைக்கருவிகளுக்கான நிதி உதவியை பானுகோபன் ரவிகரன் வழங்கியிருந்ததாக ரவிகரன் தெரிவித்தார்.



# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

■ க.அகரன்

வவுனியாவில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நபர் ஒருவர், நேற்று (17) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பஸ்ஸை, நவகமுவ பகுதியில் நிறுத்தி இராணுவப் புலனாய்வாளர்களால் சோதனையிடப்பட்டது.

இதன்போது, 5 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை தம் உடமையில் வைத்திருந்த 39 வயது நபர் கைது செய்யப்பட்டு, இரட்டைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இரட்டைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### எமக்குள் பிளவுகள் இல்லை;

# ஒன்றாகவே பயணிக்கின்றோம்

### இராதா எம்.பி தெரிவிப்பு

எஸ்.கணேசன்

"தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. நாம் ஒன்றாகவே பயணிக்கின்றோம். அடுத்த தேர்தலையும் ஒன்றாகவே எதிர்கொள்வோம்" என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற, பொங்கல் விழாவில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "இந்தியா, மலையக மக்களுக்கும் எமது நாட்டுக்கும் பல உதவிகளை வழங்கி வருகின்றது. ஆபத்தான நேரங்களில் கை கொடுக்கின்றது.

அதேபோல, இந்தியாவின் உதவிகள் எமக்கு தொடர்ந்து கிடைக்கும். இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் பங்கேற்றுள்ளார். இதனால், நுவரெலியா மாவட்டம் பெருமையடைகின்றது. நாங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக செயற்படுகின்றோம்; இனியும் செயற்படுவோம். தேர்தல்களையும் கூட்டணியாகவே எதிர்கொள்வோம்" என்றார்.







# கல்விக்குக் கரம் கொடுப்போம்

மலையக மக்கள் பேரவையின் செயற்பாடுகளில் ஒன்றான 'கல்விக்குக் கரம் கொடுப்போம்' என்ற செயற்றிட்டத்தின் கீழ், ஹட்டன், வெலிஓயா மலைமகள் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், கடந்தாண்டு 5ஆம் தர பரீட்சையில் சித்திடையந்த மாணவிக்கு சைக்கிளும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், மலையக மக்கள் பேரவையின் செயற்பாட்டாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் கலந்து கொண்டு, கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

(படங்கள்: பி. கேதீஸ்)



### ஓட்டோ பாய்ந்தது;

# சாரதி தப்பினார்

எம்.கிருஸ்ணா

டிக்கோயா- சலங்கந்த பிரதான வீதியின், ஒட்டரியில் ஓட்டோவொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், சாரதி காயமடைந்துள்ளார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

டிக்கோயா நோக்கிவந்த, ஓட்டோ, நேற்று (17) காலை 9 மணியளவில், சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து, காட்டு முருங்கை மரமொன்றில் சிக்கி நின்றுள்ளது.

இதனால் ஓட்டோ சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகத் தெரிவித்த பொலிஸார், அவர், டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றனர்.

# ட்ரோனை பறக்கவிட்ட நால்வருக்கு பிணை

ஆ.ரமேஸ்

'ட்ரோன்' கமெரா மூலம் பாதுகாப்பு வலயங்களைப் படம் பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட நால்வரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஹங்குராங்கெத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரும் குளியாப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும், ஹங்குராங்கெத்த பிரதேசத்துக்கு, இம்மாதம் 15ஆம் திகதி, சுற்றுலா பயணிகளாக வருகைத் தந்துள்ளனர்.


இந்த நிலையில், விக்டோரியா நீர்த்தேக்கப்பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்து, ட்ரோன் கமெரா மூலம் புகைப்படம் எடுக்கின்றமை தொடர்பில், கிடைத்த தகவலுக்கமைய இவர்கள் நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் (16) வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர். எஸ்.ஜினதாஸ முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபர்களை தலா 50,000 ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்த மாதம் 27ஆம் திகதி சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# குடியிருப்புகளுக்குள் குடும்பமாக நுழையும் சிறுத்தைகள்

ரஞ்சித் ராஜபக்ஷ



சிறுத்தைக் குடும்பமொன்று, பகலிலும் இரவிலும் இரை தேடி, தொடர்ச்சியாகத் தமது குடியிருப்பு பகுதிகளுக்கு வருகை தருவதாக கொட்டகலை பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொமர்ஷல் மற்றும் சமகிபுரம் ஆகிய பகுதிகளுக்கே குறித்த சிறுத்தைகள் வந்து செல்வதாகவும் இங்கு சுமார் 500 க்கும் மேற்பட்டவர்கள் வசிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசங்களுக்கு அருகில் உள்ள குடாகம பகுதியில் அமைந்துள்ள சிறிய பற்றைக்காடு மற்றும் அதற்கு அருகிலுள்ள கற்குகை பகுதிகளில் இந்த சிறுத்தைகள் வசிப்பதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குடியிருப்பு வரும் சிறுத்தைகள், கால்நடைகள், நாய்களை வேட்டையாடிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த இரண்டு பிரதேசங்களுக்குமான குடிநீர், குடாகம பற்றைக்காடு பகுதியிலிருந்தே விநியோகிக்கப்படுவதுடன், அந்த நீர்க்குழாய்களை பழுதுபார்க்க முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குறித்த சிறுத்தைகளைப் பிடித்து, வேறு வனப்பகுதிக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# இலக்கிய ஒன்றுகூடல்

துவாரகஷான்

மூங்கில் கலை இலக்கிய களத்தின் இலக்கிய ஒன்றுகூடல் அதன் செயலாளரும் ஆன்மீக யோகக்கலை ஆசிரியருமான சுப்பிரமணியம் நடராஜ் தலைமையில், நேற்று முன்தினம் (16) டயகம சௌமியமூர்த்தி தொண்டமான் கல்லூரியில் நடைபெற்றது.

தைப்பொங்கல் திருநாள் தொடர்பாக ஆசிரியர் சிவயோகனின் நாட்டார் பாடலுடன் ஆரம்பமானதுடன், ஆரம்ப உரையை, இலக்கிய களத்தின் ஒழுங்கமைப்பாளரான ஊடகவியலாளர் கே. புஷ்பராஜ் வழங்கினார்.

அத்துடன், ஆசிரியராக பணியில் இணைந்து அதிபராக தமது பணியில் 25ஆண்டுகள் வெளிவிழா காணும் மூங்கில் கலை இலக்கிய களத்தின் காப்பாளரும் ஸ்தாபகருமான குழந்தைவேல் பாலகிருஸ்ணன் மூங்கில் கலை இலக்கிய நண்பர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் கவியரங்கம், பொன்னர் சங்கர் நாடகம், பாரம்பரிய பாடல்கள், நூலின்பம், கருத்தாடல் என்பன இடம்பெற்றதுடன் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் சந்திரன் கலந்து சிறப்பித்திருந்தார்.

### பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்துக்கு

# நுவரெலிய பிரதேச சபை ஆதரவு



நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு குறித்த வர்த்தமானி, காலி மாவட்டத்துக்கு ஒரு விதமாகவும் நுவரெலியா மாவட்டத்தில் வேறு விதமாகவும் பாரபட்சமான முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில், தான் சபையில் முன்வைத்த கருத்து ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக நுவரெலிய பிரதேச சபை உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் அரச உத்தியோகத்தர் - சுயதொழில் முயற்சியாளர்களுக்கான இணைப்பாளருமான ஜெகநாதன் யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மத்திய மாகாண ஆளுநருக்கு உத்தியோகபூர்வமாக கடிதம், நுவரெலிய பிரதேச சபை சார்பாக அனுப்பி வைப்பதற்கும் இணைக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நுவரெலிய பிரதேச சபை அமர்வு இந்த மாதம் 12 ஆம் திகதி கூடியபோதே, மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இப்போது காலி மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மூன்றும் முழுமையான பிரதேச செயலகமாக செயற்படுகின்ற போதும் நுவரெலிய மாவட்டத்தில் அவை உப செயலகமாக மாத்திரம் நடைமுறைப்படுத்த எத்தனிப்பது நுவரெலிய மாவட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

இங்கே இனம், மதம், மொழி வாரியாக அல்லாது ஒட்டுமொத்த மாவட்ட மக்களுக்கும் இடம்பெறும் அநீதிக்கு எதிராக மக்கள் மன்றம் என்ற வகையில் நுவரெலியா பிரதேச சபை இந்த விடயத்தைக் கையாள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற்கு சபையில் ஏகமனதான ஒத்துழைப்பு கிடைத்ததாகவும் விரைவில் மத்திய மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு

# 300 புதிய மாணவர்கள்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் புதிய மூன்று பாடத்திட்டங்களுக்காக 300 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர் என, குறித்த தொழிற்பயிற்சி நிலையத்தின் அதிபர் எஸ்.விஜேசிங் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட 300 மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமையவே இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.



புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு நேற்று (17) ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சிங்கமலை குளத்திலிருந்து

# மிதந்த சடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகருக்கு குடிநீர் விநியோகிக்கும் சிங்கமலை குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று (17) காலை மீட்கப்பட்டுள்ளது என, ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வனப்பகுதிக்கு விறகு சேகரிப்பதற்காகச் சென்ற நபர் ஒருவர், இந்தச் சடலத்தைக் கண்டு, ஹட்டன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பாக இதுவரை எவ்வித தகவல்களும் உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



### மனோவின் கருத்து

# தமிழர்களை எரித்த வரலாற்றை ஞாபகப்படுத்துகின்றது

பி.கேதீஸ்



எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியை அமைத்து, மலையகத்தில் போகிப் பண்டிகை கொண்டாடப் போவதாக, பாராளுமன்றஉறுப்பினர்மனோ கணேசன் தெரிவித்துள்ள கருத்தானது, கடந்த காலத்தில் அவர் சார்ந்துள்ள கட்சியினரின் ஆட்சியில் தமிழர்களின் உடைமைகளையும் உயிர்களையும் எரித்த வரலாற்றை ஞாபகம் ஊட்டுகிறது என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் மேலும் தெரிவிக்கையில்; பொறுப்பு வாய்ந்த கட்சிகளின் தலைமை பதவி வகிப்பவர்கள் தூரநோக்கு சிந்தனையோடும், சமூகத்துக்கான எதிர்காலத் திட்டங்களோடும் பேசும்போது மாற்றுக் கருத்துகள் உள்ளவர்களும் கூட மதிக்கும் வகையில் அமைய வேண்டும்.

ஆனால், குரோதங்களோடும் பழிவாங்கும் எண்ணங்களோடும் காழ்புணர்ச்சியோடும் கருத்துகளை வெளியிடுவது நாம் சார்ந்த சமூகத்துக்கு ஆரோக்கியமாக அமையாது.

இந்த நாடு சுதந்திரமடைந்த பின்பு, தமிழர்களின் உடைமைகள் பலமுறை எரிக்கப்பட்டு இருக்கின்றன; உயிர்கள் பறிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த வரலாற்று காயங்களோடு தான் பெரும்பான்மை கட்சிகளோடு நாங்கள் பயணித்திருக்கிறோம்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், தமிழ்ச் சமூகம் அந்த அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவைக் கொடுத்தும் எதையுமே பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு இதுவே காரணமாகும்.

அத்துடன், நல்லாட்சி காலத்தில் தமிழ்க் கட்சிகளை வைத்தே மாகாண சபைகள் நடைபிணங்களாக்கப் பட்டன. இதில் பிரதான பங்கு வகித்தவர் மனோ கணேசன் என்பதை வரலாறுகள் சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்கும்.

தற்போது நாட்டின் நிலைமை மிக மோசமாக இருக்கின்றது என்பது உண்மைதான். அதில் எவ்விதமான மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது. இதை வைத்துக்கொண்டு கடந்தகால நல்லாட்சியின் கறுப்பு பக்கங்களைக் கழுவி விட முடியாது என்றார்.

# தேர்தல் ஒத்திவைப்பு: ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை இழப்பு

ஜனநாயக்கத்தின் மீது அதீத நம்பிக்கையை கொண்டிருக்கும் எந்தவோர் அரசாங்கமும் தேர்தல்களை ஒத்திவைக்காது. பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர், உரிய திகதியில் தேர்தலை நடத்தும். இன்னும் சில அரசாங்கங்கள், தாங்களே வெற்றியீட்டுவோம் என உறுதியானால் மட்டுமே தேர்தல்களுக்கு திகதி குறிப்பர்.

பாராளுமன்றம், மாகாண சபை ஆகிய தேர்தல்களில் இவ்வாறு காய்களை நகர்த்தி, வெற்றிவாகை சூடிக்கொண்டு, அடுத்தடுத்த படிகளுக்குச் செல்வர். இதில், மக்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைப் பிடித்துக்கொள்வதிலேயே பெரும் அக்கறையுடன் இருப்பர்.

எனினும், 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்ட தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம், இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. எனினும், விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக, அப்பதவிக்காலம் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் மீது அதீத நம்பிக்கையை கொண்டிருக்கும் இவ்வரசாங்கம், தேர்தலை ஏன் ஒத்திவைத்தது என்பது தொடர்பில் மக்களிடத்தில் கடும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தேர்தலுக்குச் செல்வதற்கு இவ்வரசாங்கம் ஏன் அஞ்சுகின்றது என்பது தொடர்பில் மக்களிடத்தில் கேள்விகள் எழும்பியுள்ளன.

அதனால்தான் என்னவோ, தேர்தலுக்கான நாட்காட்டியை தயாரிக்கவேண்டுமென தேர்தல்கள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் அமைப்புகள் அரசாங்கத்தை வலியுறுத்திக்கொண்டிருக்கின்றன. தேர்தல் நாட்காட்டியொன்று தயாரிக்கப்படுமாயின், ஜனநாயகத்தின் மீதும் மக்களின் மீதும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் கட்டாயம் கவனம் செலுத்திக்கொண்டே இருக்கும்.

தங்களுக்கு உகந்த காலத்தில் தேர்தலை நடத்துவதற்காக, காத்திருக்கவேண்டிய தேவை இருக்காது. அதேபோல, தவறான பாதையில் பயணிக்கும் ஆட்சிக்கு, தேர்தலின் மூலம் மக்கள் தக்க பதிலையும் வழங்குவர்.

மக்களிடத்தில் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் ஊடாகவே அரசியல்கட்சி ஒன்று உரசிப்பார்க்க முடியும். அதில் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில், மிகவேகமாக பாராளுமன்றம், மாகாண சபை ஆகிய தேர்தல்களில் காலடி எடுத்துவைக்கலாம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இந்நிலையில்தான், கொரோனா வைரஸ் தொற்றைத் தடுத்தல், பெரும் முடக்க நிலைமையில் இருந்து நாடு மீண்டும் வழமை நிலைமைக்குத் திரும்பியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் அன்றாட கடமைகளை முடக்காமல் இருத்தல், பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில், இடையூறுகள் இன்றி நடத்திச் செல்லுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒரு வருடத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது என அரசாங்கம் விளக்கம் கொடுத்துள்ளது.

இந்த விளக்கத்தில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது என்றாலும், மக்களின் வாக்குரிமையை பயன்படுத்தி, ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்கு, உரிய நேரத்தில் சந்தர்ப்பமளிக்க வேண்டும். அதனூடாகவே நாட்டில் ஜனநாயகம் கட்டிக்காக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தமுடியும்.

நேரடியான மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதன் ஊடாக, ஜனநாயக்கத்தின் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நன்றி மறத்தல், ஒருவிதத்தில் நயவஞ்சகத்துக்கு ஒப்பானதுதான். உதவி நல்கிய ஒருவரின் முகத்தில் ஓங்கிக் குத்தினால், அடியை வாங்கியவரின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை உணர்க! கெட்ட பெயர்களில் கேவலமான பெயர், 'நன்றி கெட்டவன்' எனப் பெயர் எடுப்பதாகும்.

உதவிபெறுவதில் சாமர்த்தியமாகச் செயற்படுபவர்கள், அந்த உதவியை அக்கணமே மறந்துவிடுவதை என்ன என்பது? நல்ல எண்ணம் கொண்டவர்கள், ஒருவரிடம் கடமைப்பட்டால், தங்கள் உயிர் இருக்கும்வரை மறக்கமாட்டார்கள்.

அரசியலில் இதுவெல்லாம் வேறுவிதம்தான். பெரும் உதவியை மறந்து, முதுகில் குத்துவது, அரசியல்வாதிகளுக்கு அல்வா சாப்பிடுவது போலவே இருக்கும். ஏறிய ஏணியை எட்டி உதைத்துவிடுவது போலவே இவர்களது செயல் இருக்கும்.

வஞ்சகமாகத் திட்டமிட்டுக் கவிழ்த்தவர்கள் கூட, தலைவர்களாக வரும் சந்தர்ப்பங்களும் வரலாம். இதுபற்றிய எந்தவிதமான கூச்சமோ கவலையோ அவர்களுக்குக் கிடையாது. செய்யும் வினைகள் தொடரும்; அடுத்தவர் மனதை இடிப்பது மகா தவறு.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

முஸ்லிம் எம்.பிக்கள்

# தவறுகளைத் திருத்துவது எப்போது?

மொஹமட் பாதுஷா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சிக்கு வந்து, கடந்த இரண்டு வருடங்களில் செய்ய முடியாதவற்றை, மீதமிருக்கின்ற மூன்று வருடங்களில் செய்யப் போவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

நாடு என்றுமில்லாத பொருளாதார பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. மக்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கூட, சீராகக் கொண்டு நடத்த முடியாத நெருக்கடிக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கலாக, கிட்டத்தட்ட 95 சதவீதமான பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஏகப்பட்ட பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இனிவரும் நாள்களிலாவது நிலைமைகள் சீரடையும் என்ற நம்பிக்கையை விட, இன்னும் மோசமடைந்து விடுமோ என்ற அச்சமே, மக்களை அதிகளவில் ஆட்கொண்டுள்ளது. இது, எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இன்மையைத் தோற்றுவித்துள்ளது.

நெருக்கடிகளுக்கு காத்திரமான தீர்வுகளைக் காணாமல், எகத்தாளமான தோரணையில் எடுக்கப்படும் தீர்மானங்களும் அரசியல் இலாபம் தேடுவோரின் காய் நகர்த்தல்களும், பாரதூரமான தாக்கங்களை நாட்டில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

'ஒரு சோற்றுப் பீங்கானுக்குள் முழுப் பூசணிக்காயை மறைக்க முயல்வது' போல, அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தாலும், நிலைமைகளை வெற்றிகரமாக மறைக்கவோ கட்டுப்படுத்தவோ முடியவில்லை. அவை கைமீறிச் செல்லும் ஒரு கட்டத்துக்கு, ஆட்சியாளர்கள் வந்திருக்கின்றார்கள்.

இந்த நெருக்கடியும் கவலையும், ஆட்சியாளர்கள் மீதான விசனமாக, விமர்சனமாக மாறியிருக்கின்றன. சிறுபான்மை மக்கள் மட்டுமன்றி, கணிசமான பெரும்பான்மை மக்கள் மட்டுமல்லாமல் ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் கூட, ஆட்சியின் தோல்வி பற்றி, காட்டமான கருத்துகளை முன்வைத்து வருகின்றார்கள்.

ஆகவே. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக, எல்லாத் தரப்பும் கூட்டிணைந்து பணியாற்ற வேண்டிய தருணமாக இதைக் கருதலாம். ஆனால், ஆட்சியைக் கவிழ்ப்பது அல்லது, அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவது பற்றித்தான், இப்போது பெருந்தேசிய கட்சிகள் கரிசனை காட்டுகின்றன.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க, பல அரசியல் தரப்புகள் வியூகங்களை வகுக்கக் தொடங்கியுள்ளன. அரசியலில் அதுவும் ஓர் உத்திதான். இந்த அரசாங்கம் மக்களை சரியாக ஆளவில்லை; தமது போக்குகளை மறுபரிசீலனை செய்து கொள்ளவில்லை என்றால், மாற்றுத் தெரிவு குறித்து சிந்திப்பதில் தவறொன்றும் கூறமுடியாது.

பல்வேறு புதுக் கூட்டணிகள் பற்றிப் பேசப்படுகின்றது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியை பிரதானமாகக் கொண்டு, ஒரு கூட்டுப் பற்றிப் பேசப்படுகின்றது.

சஜித் பிரேமதாஸ, ஒரு கூட்டணி கனவோடு முன்னோக்கி நகரத் தொடங்கியுள்ளார். இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தலைமையிலான புதிய கூட்டணி பற்றிய அனுமானங்கள், அரசியல் பெருவெளியில் இப்போதைய பேசுபொருளாகியுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளராக இரண்டு தடவை பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆசனத்தை, சந்திரிகா அம்மையாரிடம் சிபாரிசு செய்து பெற்றுக் கொடுத்தவர்களுள் ஒருவராகக் கருதப்படும் சுசில் பிரேம்ஜயந்த, அரசாங்கத்தை விமர்சிக்கின்றார் என்ற காரணத்துக்காக, சர்வசாதாரணமாக பதவி பறிக்கப்பட்டார்.

அதுதான், இன்று புதிய கூட்டணி பற்றிய பேச்சுகளையும் ஆட்சிமாற்றத்துக்கான நகர்வுகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. வழக்கம்போல, வஞ்சிக்கப்பட்டோர், மனம் வெறுத்தோர், அதிருப்தியடைந்தோர், பதவி ஆசை கொண்டோர் எனப் பலர் கூட்டுச் சேர்வதற்கான நிகழ்தகவுகள் உள்ளன. ஆனால், இந்த மந்திரமெல்லாம் பலிக்கும் என்பதற்கு, எவ்வித உத்தரவாதங்களும் கிடையாது.

எவ்வாறிருப்பினும், தாம் வெற்றிகரமான ஆட்சியை நடத்த முடியாமல் போய்விட்டது என்பதை, ஆளும் தரப்பினர் உணர்ந்திருப்பார்கள். அடுத்த தேர்தலில் தோல்வியடைந்து விடுவோமோ என்ற பயம், அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. என்னதான் அவர்கள் வீராப்பாகப் பேசினாலும், உள்மனதில் இருக்கின்ற உதறலும் பயமும் அவர்களையும் மீறி வெளிப்படுவதை கூர்ந்து நோக்குகின்ற மக்கள் கவனிக்கத் தவறவில்லை.

இந்த வேளையிலேயே, இனிவரும் மூன்று வருடங்களுக்குள் எல்லாவற்றையும் செய்து காட்டுவோம் என்ற தொனியில், அவர்கள் மீண்டும் மக்களுக்கு வாக்குறுதி வழங்குவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது. கடந்த இரண்டு வருடங்களில் தம்முடைய தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதையும் நிறைவேற்ற முடியாமல் போயிருக்கின்றது என்ற தெளிவு, அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லலாம்.

இந்த இடத்தில் இரண்டு கேள்வி எழுகின்றன! அதாவது, முஸ்லிம் தலைவர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கின்றார்களா? அல்லது, நிறைவேற்றவில்லை என்பதை உணர்ந்திருக்கின்றார்களா? என்பதுதான் அந்தக் கேள்விகளாகும்.

தற்போதுள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் கட்சிகளில் அங்கம் வகித்துக் கொண்டு, அரசாங்கத்துக்கு 'ஜால்ரா' அடிக்கின்ற எம்.பிக்கள், பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் ஏனைய முஸ்லிம் எம்.பிக்கள் ஆகியோரிடம் தனித்தனியாக கேட்கப்பட வேண்டிய கேள்விகள் இவையாகும்.

அவர்கள் மட்டுமன்றி, 1990களின் பிற்பகுதியில் இருந்து இந்த ஆட்சி 2015 வரையும், பதவிகளைச் சுகித்த முன்னாள் எம்.பிக்களும் அமைச்சர்களும் இந்த வினாவுக்கு பதிலளிப்பதில் இருந்து விதிவிலக்குப் பெற முடியாது.

ஏனெனில், கடந்த இரண்டு வருடங்களில் மட்டுமல்லாமல், அதற்கு முந்திய 20 வருடங்களில் கூட, முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை.

பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை விடவும், அதற்கான உளப் பூர்வமான நடவடிக்கைகளை முஸ்லிம் அரசியல்வாதிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதே மிகப் பாரதூரமான விடயமாகும்.

ஒரு சமூகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாயின், அதுபற்றிப் பரந்துபட்ட அறிவு இருக்க வேண்டும். சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பான ஆவணங்கள் கைவசம் இருக்க வேண்டும். தேவையான போது சமூகத்துக்காக யாருடனும் பேசுவதற்கும் தம்முடைய நிலைப்பாட்டை தெளிவுறச் சொல்வதற்குமான கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்.

பணத்தாசையையும் பதவி ஆசையையும் விட, மக்களுக்குச் சேவையாற்றுவதே முன்னுரிமைத் தெரிவாக இருக்க வேண்டும். தமக்கு சொந்தப் புத்தி குறைவென்றாலும் தம்மைச் சுற்றியுள்ள தரப்பினர், அதாவது இணைப்பாளர்கள், ஆலோசகர்கள் சமூகப் பிரச்சினைகள் பற்றிய புரிதல் உள்ளவர்களாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால், இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு இந்தப் பிரச்சினைகள் உள்ளன. அவர்களது எதிர்பார்ப்பு இதுதான் என்பதை, சரியாக அவர்கள் முன்வைத்திருக்கின்றனர்.

தமிழர் விவகாரத்தில் எதையாவது அடைந்து கொள்ள அவசியமென்றால், அவர்கள் ஜனாதிபதியுடன் பேசவும் தயார்; எதிர்க்கட்சியுடன் சேரவும் தயார். இரண்டு தரப்பையும் எதிர்க்கவும் தயார் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இவ்விதமான அரசியலில், முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்னும் அரிச்சுவடி கூட கற்றுக் கொள்ளவில்லை என்பதே நிதர்சனமாகும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை, கடந்த இரண்டு வருடங்களாக நிறைவேற்றவில்லை என்பதை, அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகளும் தமது கையறு நிலை குறித்து, அடிக்கடி கருத்து வெளியிடுகின்றன. இது அவர்கள், தமது தவறுகளைக் கொஞ்சமாவது திருத்திக் கொள்ள ஏதுவாகலாம்.

ஆனால், ஆண்டாண்டு காலமாக முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், தமது தவறுகளை உணர்ந்து கொண்டதாகவோ திருத்திக் கொண்டதாகவோ தெரியவில்லை. பழையவர்கள் இப்படியென்றால், புதிதாக எம்.பியாக வருகின்றவர்கள் அதைவிட மோசமாக, மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார்கள்.

மக்களது பிரச்சினைகளை எவ்வாறு முன்வைக்கலாம்? எவ்வாறான நகர்வின் ஊடாக அவற்றுக்கான தீர்வுகளை நோக்கி நகரலாம்? என்று யோசிக்காமல், இப்போது யாருடன் 'டீல்' பேசலாம்? தேர்தல் வரும்போது மக்களை எவ்வாறு பேய்க்காட்டலாம் என்று சிந்திக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளாலேயே முஸ்லிம் சமூகம் இவ்வளவு இழப்புகளையும் சந்தித்திருக்கின்றது.

பொதுவாக, முஸ்லிம் அரசியல்வாதிகளை 'கள்வர் கூட்டம்' என்று மக்கள் விமர்சிக்கின்ற போதிலும், அவர்களது தவறுகள் பற்றிப் பொதுவெளியில் யாரும் கேள்வி எழுப்பியதில்லை. பள்ளிவாசல்களோ, ஜம்மியத்துல் உலமா சபை போன்ற உயரிய சபைகளோ, சிவில் அமைப்புகளோ, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற மாணவர் மையங்களோ இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

சமூக சிந்தனையே அற்ற அரசியல்வாதிகளுக்குத் திரும்பத் திரும்ப வாக்களித்துக் கொண்டும், மௌனமாக இருப்பதன் ஊடாக, அவர்கள் செய்கின்ற தவறுகளை அங்கிகரித்துக் கொண்டும் காலத்தைக் கடத்துகின்ற ஒரு மக்கள் கூட்டத்தின் நிலைமை எவ்வாறிருக்கும் என்பதற்கு, நிகழ்கால இலங்கை முஸ்லிம்கள் நல்ல உதாரணமாவர்.

## கடிதங்கள்

### பொலிவேரியனின் குறை தீர்க்குமாறு கோரிக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராம வீதிகள், பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதையும் தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும் பலதடவைகள் அதிகாரிகள், அரசியல் வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று பொலிவேரியன் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக்காலங்களில், பாம்பு போன்ற நச்சு ஜீவராசிகள் வீடுகளை நோக்கி படையெடுக்கும் நிலை உள்ளதாகவும் இரவில் ஓரளவு வெளிச்சம் தரக்கூடிய மின்விளக்குகள் இல்லாமையால், பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும், இந்தப் பிரதேசத்தின் பிரதான நுழைவாயிலாக உள்ள பாலம் கூட, மிகப்பெரிய சேதத்தை அடைந்துள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளும் மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் கடந்தும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்று கூறுகின்றனர்.

சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராம மக்களின் நிலையறிந்து, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி திட்டங்கள் மூலமாக, இந்த வீதிகளை சீராகப் பாவனைக்கு உகந்தளவில் மாற்றித்தருமாறு, மக்கள் கோரிக்கை விடுப்பதுடன், கல்முனை மாநகர சபை வெளிச்சம் தரக்கூடிய தெருவிளக்குகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றனர்.

–நூருல் ஹுதா உமர்



# சின்ன திரையிலும் அட்ஜஸ்ட்மெண்ட்



திரைப்படங்கள் மட்டுமல்லாமல், சின்னத்திரையிலும் நடிகைகள் தங்களுக்கென்று ஓர் இடத்தைப் பிடிப்பது சுலபமானது அல்ல. நடிப்பில் ஆர்வம் கொண்ட பெண்களுக்கு அவ்வளவு எளிதாக சரியான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அதே போல, நீடித்து நிலைப்பதும் அவ்வளவு சுலபம் இல்லை. போட்டி நிறைந்த உலகில், 'அட்ஜஸ்ட்மெண்ட்' செய்வது பல ஆண்டுகளாக நடிகைகள் எதிர்கொண்டு வரும் பிரச்சினையாகும்.

அவ்வப்போது தகாத முறையில் நடந்து கொள்வது பற்றி, பாலியல் துன்புறுத்தல் பற்றி எல்லாம் நடிகைகளிடம் இருந்து புகார்கள் வந்தாலும், இந்த நிலை மாறவில்லை என்பதை உறுதிபடுத்தும் விதமாக, 'கயல்' சீரியல் நடிகை அதிர்ச்சியூட்டும் ஒரு பேட்டியை அளித்துள்ளார்.

தன்னிடம் 'அட்ஜஸ்ட்' பண்ணச் சொல்லிக் கேட்டதாக அபி நவ்யா, கூறியுள்ளார்.

அபி நவ்யா, சின்னத்திரை ரசிகர்களிடையே பரிச்சயமான முகம் தான். செய்திவாசிப்பாளராக பணியாற்றிய அபிநவ்யா, தற்போது முன்னணி சீரியல்களில் நடித்து வருகிறார். இவர் சன்டிவியில் ஒளிபரப்பான பிரியமானவள் தொடரில் ஸ்வாதி என்ற பாத்திரத்திலும், கண்மணி தொடரில் சினேகா என்ற பாத்திரத்திலும் நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தித்திக்கும் ஐஸ்வர்யா மேனன்



'ஹிப் ஹொப்' ஆதிக்கு ஜோடியாக 'நான் சிரித்தால்' படத்தில் நடித்ததன் மூலம் ரசிகர்களுக்கு பரிச்சயமானவர் நடிகை ஐஸ்வர்யா மேனன்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என தென்னிந்தியாவின் அனைத்து மொழிகளிலும் இப்போது நடித்து வருகிறார்.

சமூக வலைதளங்களின் 'ஹொட் குயின்' ஆக வலம் வந்துகொண்டிருக்கும் ஐஸ்வர்யா மேனன், பாவாடை தாவணியில் கட்டு கரும்பை போல தித்திக்கும் அழகிய புகைப்படங்களை இப்பொழுது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.



'அருந்ததி' 13வது ஆண்டு

# பெருமைப்படும் அனுஷ்கா

கோடி ராமகிருஷ்ணா இயக்கத்தில், அனுஷ்கா முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்த 'அருந்ததி' தெலுங்குப் படம் வெளிவந்து 13 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தெலுங்கில் மட்டும் பெரிய வெற்றியைப் பெறாமல், தமிழிலும் டப்பிங் செய்யப்பட்டு வசூலைப் பெற்றது.

இப்படத்தில் அனுஷ்காவின் இரு வேட நடிப்பு ரசிகர்களைக் கவர்ந்தது. 'அருந்ததி, ஜெஜம்மா' என இரண்டு கதாபாத்திரங்களில் நடித்திருந்தார் அனுஷ்கா. மேலும், அனுஷ்காவிற்கு முன்னணி நடிகையாக தனித்துவமான வரவேற்பை இப்படம் பெற்றுத் தந்தது.

இப்படம் வெளிவந்து 13 ஆண்டுகள் முடிந்ததையடுத்து படம் பற்றி பெருமையுடன் நினைவு கூர்ந்துள்ளார் அனுஷ்கா. "ஜெஜம்மா, எந்த ஒரு நடிகைக்கும் வாழ்க்கையில் ஒரு முறைதான் இப்படியான கதாபாத்திரம் அமையும். நான் அதற்கு உண்மையாகவே கொடுத்து வைத்தவள். கோடி ராமகிருஷ்ணா சார், ஷியாம் பிரசாத் ரெட்டி மற்றும் குழுவினருக்கு நன்றி. ரசிகர்களின் பெரிய அன்புக்கும், ஆதரவுக்கும் பெரிய நன்றி. இந்தப் படம் எப்போதுமே என் மனதுக்கு நெருக்கமான படம்" எனக் கூறியுள்ளார்.

அனுஷ்கா நடித்து கடைசியாக 2020 ஒக்டோபரில் 'சைலன்ஸ்' படம் வெளிவந்தது. அதன்பின் எந்த ஒரு படத்திலும் அவர் நடிக்கவில்லை.

# கொம்பு வச்ச சிங்கம்டா

நவீனத்தின் அனைத்து வசதிகளும் சென்றடைந்த கிராமம் அது. அங்கு, பள்ளிக் காலம் தொடங்கி நண்பர்களாக இருக்கின்றனர் 6 இளைஞர்கள். அவர்களில் ஒருவரான நாயகன் (சசிகுமார்), ஊர்ப் பெரியவரின் (மறைந்த இயக்குநர் மகேந்திரன்) மகன். இந்த 6 பேரும் 'கடவுளும் இல்லை; சாதியும் இல்லை' என்ற கொள்கை கொண்டவர்கள். சாதிபேதமற்ற அவர்களது நட்பு, சாதிப் பற்றுகொண்ட சிலரது கண்களை உறுத்துகிறது.

இந்தச் சமயத்தில் உள்ளூராட்சித் தேர்தல் வர, 6 பேரும் இரண்டு அணிகளாகப் பிரிந்து, வேறுவேறு கட்சிகளுக்கு வேலை செய்கின்றனர். ஓர் அணியில் உள்ள நண்பன் கட்சிப்பகையால் கொல்லப்படுகிறார். பின்னர், மற்றொரு நண்பனும் கொல்லப்படும்போது, விலகிய நண்பர்கள் சுதாரிக்கின்றனர். இந்த வன்மத்தின் பின்னால் இருப்பது யார் என்பதை, 3 ஆவது நண்பன் கொல்லப்படும் முன்பு நாயகன் எப்படி கண்டுபிடிக்கிறார் என்பது கதை.

# மம்மூட்டிக்கு கொரோனா

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்துவருகிறது. நாளொன்றுக்கு இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுகிறது. தமிழ்நாட்டில் நாள் ஒன்றுக்கு சுமார் 24,000 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கொரோனாவால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைக் கடந்து, அரசியல் தலைவர்களும் சினிமா பிரபலங்களும் பாதிக்கப்படும் சூழல் வேகமாகி வருகிறது.

நடிகர் மம்முட்டிக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. கொரோனா மூன்றாவது அலையில் மீனா, த்ரிஷா, சத்யராஜ், அருண்விஜய், மகேஷ்பாபு, ஷெரின் உள்ளிட்ட நடிகர்கள் பாதிக்கப்பட்டனர். அதேபோல, மலையாள பட இயக்குநர் ப்ரியதர்ஷனுக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.



# 'புஷ்பா' படத்துக்கு கமல் பாராட்டு



சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'புஷ்பா'. தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் இப்படம் உலகமெங்கும் வெளியானது. ஃபகத் பாசில், ராஷ்மிகா மந்தனா, சுனில், அஜய் கோஷ் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடித்துள்ளனர். ஒரு பாடலுக்கு சமந்தா நடனமாடியுள்ளார்.

'ரங்கஸ்தலம்' வெற்றிக்குப் பிறகு சுகுமார் இயக்கிய படம், ஹிட் பாடல்கள், சர்ச்சைகள், கடைசி நேர இழுபறி எனப் பெரும் எதிர்பார்ப்புக்கிடையே இப்படம் வெளியானது. கொரோனா ஊரடங்குக்குப் பிறகு வெளியான அனைத்துப் படங்களின் வசூலையும் முறியடித்து 'புஷ்பா' முதல் நாளில் ரூ.45 கோடி வசூலித்தது.

கதக் நடன கலைஞர்

# காலமானார்

பிரபல கதக் நடன கலைஞரான பண்டிட் பிர்ஜூ மஹாராஜ், தனது பேரக் குழந்தைகளுடன் விளையாடிய போது திடீரென மயங்கி சரிந்த அவரை, குடும்பத்தினர் மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், அவர் மாரடைப்பு காரணமாக ஞாயிற்றுக்கிழமை (16) நள்ளிரவில் உயிரிழந்துவிட்டார். இறக்கும் போது அவருக்கு வயது 83. இவரின் கலைச் சேவையைப் பாராட்டி, இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான 'பத்ம விபூஷன்' விருதை 1986இல் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

புதுடெல்லி:

# தமிழகத்தின் அலங்கார ஊர்தியை நிராகரித்த மத்திய அரசு

புதுடெல்லியில் குடியரசு தின அணிவகுப்பில், தமிழக அரசின் சார்பில் பங்கேற்கவிருந்த அலங்கார ஊர்தி நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்திய குடியரசு தின விழா ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த விழாவில் ஒவ்வொரு மாநிலங்களின் சிறப்புகளை விளக்கும் வகையில், அந்தந்த மாநிலங்கள் சார்பில் அலங்கார ஊர்திகள் பவனி இடம்பெறும்.

இந்த அலங்கார ஊர்தி பவனிக்காக 36 மாநிலங்கள் மொடல்களை அனுப்பியிருந்தன. 12 மாநில மொடல்கள் மட்டுமே ஏற்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு சார்பில் அனுப்பப்பட்ட அலங்கார ஊர்தி மொடல்களில், சுதந்திர போராட்டத் தியாகிகளான வ.உ.சி, வீரமங்கை வேலுநாச்சியார், பாரதியார் உள்ளிட்டோரின் புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்திய அளவில் மிகவும் பிரபலமான வீரர்களை எதிர்பார்ப்பதாகக் கூறி, மத்திய அரசு நிராகரித்துவிட்டதாக கூறப்படுகிறது. அதுபோல், இவர்களை சர்வதேச தலைவர்களுக்கு யாரென்றே தெரியாது என்றும் அதிகாரிகள் தெரிவித்ததாக தெரிகிறது. தமிழக அரசின் அலங்கார ஊர்தி, நான்காவது சுற்று வரை சென்ற நிலையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் தமிழகம், கேரளா, தெலுங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களின் அலங்கார ஊர்தி




நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், கர்நாடகா அரசின் அலங்கார ஊர்திக்கு மட்டும் அனுமதி அளித்துள்ளது.

அதேபோல், மேற்கு வங்காளத்தின் சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது ஆண்டு பிறந்த நாளையொட்டி, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையிலான அலங்கார ஊர்தி தயார் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த அலங்கார ஊர்திக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கேரள அரசின் ஸ்ரீ நாராயண குருவின் அலங்கார ஊர்திக்கும் மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது. இவர், 'ஒன்றே குலம்; ஒருவனே தெய்வம்' என்ற தத்துவத்தை வலியுறுத்திவர். இவரின் அலங்கார ஊர்தி நிராகரிக்கப்பட்டதற்கு கேரளாவை சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளும் அரசும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மேற்கு வங்க அரசின் அலங்கார ஊர்திக்கும் திடீரென அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கம் மாநிலம், நேதாஜி மற்றும் நாட்டின் சுதந்திரத்துக்கு அர்ப்பணித்த சுதந்திர போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையிலேயே அலங்கார ஊர்தி அமைத்திருந்தது.

இதனால், அதிருப்தியடைந்த முதலமைச்சர் மம்தா பானர்ஜி, இது தொடர்பாக பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், 'இந்த முடிவால் நான் ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். மத்திய அரசின் இந்த அணுகுமுறையால் மேற்கு வங்க மக்கள் அனைவரும் மிகவும் வேதனையடைந்துள்ளனர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வங்கம் முன்னணியில் இருந்ததுடன் நாட்டின் சுதந்திரத்துக்காக மிகப்பெரிய விலையை செலுத்தியுள்ளது. மத்திய அரசு இதுகுறித்து மறுபரிசீலனை செய்து, குடியரசு தினவிழாவில் மேற்கு வங்காள அலங்கார ஊர்திக்கு அனுமதி அளிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்படி குடியரசு தின விழா அணிவகுப்பில், மேற்கு வங்காள அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது இது முதல் முறை கிடையாது. ஏற்கெனவே 3 முறை அனுமதி மறுக்கப்பட்டுள்ளது; இது 4வது முறையாகும். 2015, 2017, 2020 ஆண்டுகளில் நடந்த குடியரசு தின விழா அணிவகுப்பில் இப்படித்தான், மேற்கு வங்காள அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



ராஜஸ்தான்

225 அடி நீளம்; 150 அடி அகலம்

# பிரமாண்ட தேசிய கொடி

ஜெய்ப்பூர், ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள இராணுவ தளத்தில் கதர் துணியால் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய தேசிய கொடி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர இந்தியாவின் முதல் இராணுவ தலைமை தளபதியாக ஜெனரல் கே.எம். கரியப்பா பொறுப்பேற்றார். அதை நினைவுபடுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 15ஆம் திகதி தேசிய இராணுவ தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டியே, ஜெய்சால்மரில் உள்ள இராணுவ தளத்தில், கதர் துணியால் தயாரிக்கப்பட்ட பிரமாண்ட இந்திய தேசிய கொடியை, இந்திய இராணுவத்தின் தென்மண்டல பிரிவினர் காட்சிப்படுத்தினர். 225 அடி நீளமும் 150 அடி அகலமும் அந்தக் கொடியின் அளவுப்பிரமாணமாகும்.

புதுடெல்லி:

கொரோனா காலத்தில்

# பெற்றோரை இழந்த 1.47 இலட்சம் குழந்தைகள்

கொரோனா மற்றும் பிற காரணங்களால் 2020 ஏப்ரல் மாதம் முதல் 1.47 இலட்சம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளனர். இந்தியாவில் கொரோனா பெருந்தொற்றால், ஏராளமான குழந்தைகள் பெற்றோரை இழந்து ஆதரவற்றவர்களாகி உள்ளனர்.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பெற்றோரை இழந்த குழந்தைகள் பற்றிய புள்ளிவிவரத்தை தாக்கல் செய்யும்படி, குழந்தைகள் உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி, இந்த ஆணையம் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அதில், 'இந்தியா முழுவதும் 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 910 சிறுவர்கள், குழந்தைகள் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்துள்ளனர்.

முழு கவனிப்பும், ஆதரவும் தேவைப்படும் சிறுவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்து 94 பேர் உள்ளனர். பெற்றோர் அல்லது உறவினர்களால் கைவிடப்பட்டவர்கள் 488 பேர் உள்ளனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 492 ஆக உள்ளது.

தாய், தந்தை இருவரையும் இழந்த குழந்தைகள் ஒடிசாவில் 24,405, மகாராஷ்டிராவில் 19,623, குஜராத்தில் 14,770, தமிழகத்தில் 11,014, ஆந்திராவில் 8,760, புதுடெல்லியில் 6,629 பேர் உள்ளனர்.

இவர்களில் 59 ஆயிரத்து 10 பேர் எட்டு முதல் 13 வயதுக்கு உட்பட்டவர்கள். 22 ஆயிரத்து 763 பேர் 14 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்கள். 16-18 வயதுக்கு உட்பட்ட 22,626 பேரும், 4 முதல் 7 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் 26 ஆயிரத்து 80 பேரும் உள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.



லக்னோ:

# வேட்பாளரான பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் தாய்

உத்தரப்பிரதேசம், உன்னாவ் நகரில் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட சிறுமியின் தாயாரை, வேட்பாளராக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. பாரதிய ஜனதா கட்சி எம்.எல்.ஏவான குல்தீப்சிங் செங்கர் 2017ஆம் ஆண்டு உன்னாவ் நகரில் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தார். பா.ஜ.கவுக்கு எதிராகவே தற்போது காங்கிரஸால் குறித்த பெண் வேட்பாளராக இறக்கப்பட்டுள்ளார்.

ராஜபாளையம்

# நோயாளி அம்மாவை பராமரிக்கும் எட்டு வயது மகள்

ராஜபாளையம் அருகே சேத்தூரை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட அம்மாவை, அவரது மகள், தாயை போன்று கவனித்து வருகிறார்.

இரண்டு குழந்தைகள் பிறந்த நிலையில், பாக்கியத்துக்கு ஏற்பட்ட வலிப்பு நோயால் கணவர் பிரிந்து சென்றுவிட்டார். குடும்பத்தை காப்பாற்ற வேலைக்கு சென்ற நிலையில், நோய் காரணமாக தொடர்ச்சியாக வேலைக்கு செல்ல முடியவில்லை. இதனால் மனநலம் பாதிப்புக்கு ஆளானார். குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது. 10ஆம் வகுப்பு படித்த மகன் சுரேஷ், குடும்பத்தை காப்பாற்ற கட்டட வேலைக்கு சென்றான். வீட்டின் பணிகளை எட்டு வயது மகளான மகாலட்சுமி செய்து வருகிறார். இவர் தனது அம்மாக்கு உணவு ஊட்டி, அனைத்துப் பணிகளையும் பொறுப்புடன் கவனித்து வருகின்றார்.



புதுவருடத்தில்

# முதல் வெற்றியை சுவைத்தது இலங்கை அணி



சுற்றுலா சிம்பாப்பே அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் கண்டி, பல்லேகலையில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் ஐந்து விக்கெட்டுகளால் இலங்கை அணி வெற்றிப் பெற்றுள்ளது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்பே அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து, 296 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சேஹ்ன் வில்லியம்ஸன் தனது 5ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

87 பந்துகளுக்கு முகம்கொடுத்து 100 ஓட்டங்களைப் பெற்ற அவர், 2 ஆறு ஓட்டங்களையும் 9 நான்கு ஓட்டங்களையும் பெற்று சதம் அடித்தார்.

297 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 48.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி சார்பாக சந்திமால், நிசங்க ஆகியோர் இணைப்பாட்டமாக 75 ஓட்டங்களையும் சரித் அசலங்க 71 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதற்கமைய புதிய வருடத்தில் முதலாவது போட்டியை இலங்கை அணி வெற்றிகொண்டதுடன், இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி, பல்லேகல மைதானத்தில் இன்று (18) நடைபெறவுள்ளது.



# அக்னி அணி வென்றது

■ துவாரகஷான்

இளைஞர்களை விளையாட்டு துறையில் ஊக்குவிக்கும் வகையில் அணிக்கு ஏழு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியை அக்கரப்பத்தனை அயோனா விளையாட்டு கழகம் நடத்தியது.

வரலாற்றில் முதல் தடவையாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகள், கடந்த 15 மற்றும் 16ஆம் திகதிகளில், அயோனா தோட்ட பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது. இதில், 8 அணிகள் கலந்துகொண்டன.

இறுதிச் சுற்றுக்கு அக்னி அணியும் லக்ஷ்மி கழகமும் தெரிவாகின. இப்போட்டியில் முதலாம் இடத்தை அக்னியும் இரண்டாமிடத்தில் லக்ஷ்மி அணியும் தனதாக்கிக் கொண்டன.







வெற்றி பெற்ற இரண்டு அணிகளுக்கும் வைத்திய அதிகாரி வேலு முத்துமணி, சமூக சேவையாளர் எம். சந்திரகுமார், நலன்விரும்பியான ஆர். குணசீலன் தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களான செல்வராஜ் கே. ஜெகநாதன், எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் வெற்றி கிண்ணங்களையும் சான்றிதழ் உள்ளிட்ட பணப் பரிசுகளையும் வழங்கி வைத்தனர்.

இதற்கான ஒழுங்குகளை ஊடகவியலாளர் கே. புஷ்பராஜ், எஸ். சுரேஷ், கே. ஞானசேகர் ஆகியோர் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிக் பேஸ் லீக் போட்டியில்

# மெல்பர்ன் ஸ்டோஸ் அணி வெற்றி

அவுஸ்திரேலியாவின் பிக் பேஸ் லீக் போட்டியில் நேற்று முன்தினம்(16) நடைபெற்ற போட்டியில் மெல்பர்ன் ஸ்டோஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

பிரிஸ்பேர்ன் அணியுடன் இடம்பெற்ற போட்டியிலேயே மெல்பர்ன் அணி வெற்றி பெற்றுள்ளது.

மெல்பர்னில் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிப்பெற்ற பிரிஸ்பேர்ன் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிஸ்பேர்ன் அணி, 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கட்டுகளை இழந்து, 149 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

150 ஓட்டங்கள் இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மெல்பர்ன் ஸ்டோர்ஸ் அணி, 13.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

# இந்திய அணியின் அடுத்த கெப்டன் யார்?

## சுனில் கவாஸ்கர் கருத்து

■ புதுடெல்லி,

இந்திய அணியின் டெஸ்ட் கிரிக்கெட் கேப்டன் விராட் கோஹ்லி கெப்டன் பொறுப்பில் இருந்து விலகுவதாக, கடந்த சனிக்கிழமை (15) அறிவித்தார். தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிவடைந்த சில தினங்களில் டெஸ்ட் கிரிக்கெட் கெப்டன் பொறுப்பில் இருந்து கோஹ்லி விலகியது ரசிகர்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நிலையில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் அடுத்த கெப்டனாக விக்கெட் கீப்பர் ரிஷாப் பண்டை நியமிக்கலாம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கெப்டன் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இளம் வீரரான ரிஷாப் பண்டுக்கு கெப்டன் பொறுப்பை வழங்கினால் அவர் 3 வடிவிலான போட்டியிலும் இன்னும் சிறப்பாக செயல்பட உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.



# ஜோகோவிச்சுக்கு அடுத்த வருடம் வாய்ப்பு



நாடு கடத்தப்பட்டுள்ள உலகின் முதற்தர டென்னிஸ் வீரர், நொவெக் ஜோகோவிச்சுக்கு, அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள திறந்த டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு பெரும்பாலும் கிடைக்கலாமென அந்நாட்டின் பிரதமர் ஸ்கோட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சட்டதிட்டங்களுக்கு அமைய, நாடுகடத்தப்பட்ட நபர் ஒருவருக்கு 3 வருடங்கள் செல்லும் வரை மீண்டும் அந்த நாட்டுக்குள் வருவதற்கு இடமில்லை.

எனினும், உரிய முறையின் படி விசாவுக்கு விண்ணப்பம் செய்தால், 3 வருடங்களுக்கு முன்னரே அவருக்கான விசா கிடைக்கும் வாய்ப்பு உள்ளதென பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் நேற்று (17) ஆரம்பமான திறந்த டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் இன்மையால் ஸ்பெய்னின் ரபாயல் நடால் முன்னணி வகிக்கலாம் என டென்னிஸ் ரசிகர்கள் ஆருடம் கூறியுள்ளனர்.

அமெரிக்கா

# ரயிலில் இருந்து ஏவுகணைகளை ஏவிய வடகொரியா



அண்மைக்காலமாக வட கொரியா கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. பொருட்களின் விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகக் கூறப்படுகிக்றது.

எவ்வாறு இருப்பினும் அந்நாட்டின் ஏவுகணை மோகம் என்பது தீர்ந்தபாடில்லை. குறிப்பாக கண்டம் விட்டு கண்டம் தாண்டி தாக்குதல் நடத்தும் பாலிஸ்டிக் ரக ஏவுகணைகளை அந்நாட்டு தொடர்ந்து சோதித்து வருகிறது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனை பிற நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதன் காரணமாக வட கொரியா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது. எனினும், அமெரிக்காவின் பொருளாதார தடையை பொருட்படுத்தாத வட கொரியா இம்மாதத்தில் மூன்றாவது முறையாக ஏவுகணைகளை சோதித்துள்ளது.

மேலும் இது தொடர்பான புகைப்படத்தையும் அந்நாட்டு அரசு ஊடகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜென்டினா

# கைதிக்கு 'லிப்ட் கிஸ்' கொடுத்த நீதிபதி

ஆர்ஜென்டினாவில் பெண் நீதிபதி ஒருவர், கைதியொருவருக்கு உதட்டோடு உதடு முத்தம் கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியான லியாடிரோ ரொபர்ட்ஸ் என்பவரை பிரபல ரவுடியான கிறிஸ்டைன் புஸ்டோஸ் என்ற நபர் கடந்த 2009 ஆம் ஆண்டு துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்தார்.

இச்சம்பவமானது அந்நாட்டையே உலுக்கிய நிலையில் சிறிது நாள்களின் பின்னர் புஸ்டோஸ் கைது செய்யப்பட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த நிலையில் புஸ்டோஸுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், தனது தண்டனையை எதிர்த்து புஸ்டோஸ் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்த நிலையில் நீதிபதிகள் குழுவொன்று அமைக்கப்பட்டு குறித்த வழக்குத் தொடர்பான தீர்வு எடுக்கப்பட்டது.

எனினும் குறித்த நீதிபதிகள் குழுவில் இருந்த மரியல் சுவாரெஸ் எனும் பெண் நீதிபதி, புஸ்டோஸுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கக் கூடாது எனவும் அவரின் தண்டனை காலத்தை குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் குற்றவாளிக்கு மரியல் பரிந்து பேசுவது ஏன் என நீதிபதிகளுக்குள் கேள்வி எழுந்தது. மேலும் புஸ்டோஸ் அடைக்கப்பட்டிருந்த சிறையில் நடந்த சம்பவங்கள் சி.சி.டி.வி காட்சிகளும் வெளியிடப்பட்டன.

எனினும் இதுகுறித்து, மரியல் கூறுகையில், "நான் சிறைக் கைதியை முத்தமிடவில்லை. நாங்கள் சி.சி.டி.வி மூலம் கண்காணிக்கப்படுகிறோம் எனத் தெரிந்தும் எப்படி இவ்வாறு செய்வோம்" என்றார்.

இச்சம்பவம் அந்நாட்டில் பெரும் பேசுபொருளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.





அமெரிக்கா

# மேலாடையால் பிரபஞ்ச அழகிக்கு வந்த சோதனை

மேலாடை அணியாத காரணத்தால், முன்னாள் பிரபஞ்ச அழகிக்கு விமான நிலையத்திற்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம், அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற நபரும், கடந்த 2012 ஆம் ஆண்டு, மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்றவருமான ஒலிவியா காப்லோவிற்கே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இவர் மெக்சிகோவிற்குச் செல்வதற்காக தனது சகோதரி மற்றும் காதலருடன் விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

எனினும் அங்கு ஒலிவியாவை தடுத்து நிறுத்திய விமான நிலைய அதிகாரிகள் அவர் அணிந்து வந்த உடைக்கு மேல் வேறு ஓர் உடையை அணிந்தால் மாத்திரமே உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஒலிவியா, தனது காதலருக்குச் சொந்தமான ஆடை ஒன்றை அணிந்த பிறகே, அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, ஒலிவியாவின் சகோதரி, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், 'குறித்த விமான நிலையத்திற்குள் ஒலிவியாவைப் போன்ற சில பெண்கள், உடை அணிந்து இருந்ததாகவும் அவர்களை எல்லாம் அனுமதித்த அதிகாரிகள், ஒலிவிவாவை மாத்திரம் ஏன் அனுமதிக்கவில்லை' என்றும், கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் குறித்த வீடியோவானது இணைத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி

# பி.சி.ஆர் செய்யத் தேவையில்லை

கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ளாத மக்கள் இனிமேல் பி.சி.ஆர் பரிசோதனையைச் செய்யத் தேவையில்லை என துருக்கி அரசு அறிவுத்துள்ளது.

துருக்கியில் இதுவரை நாடக மேடைகள், திரையரங்குகள், பஸ்கள், அரங்குகள், உள்நாட்டு விமான சேவைகள், ரயில் சேவைகள் என பெரும்பாலான இடங்களில் பி.சி.ஆர் சோதனை முடிவுகளைக் கட்டாயம் காட்ட வேண்டும் என்ற விதிமுறை காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த விதிமுறையை துருக்கி அரசாங்கம் தற்போது நீக்கியுள்ளது.

இச்செய்தியானது அந்நாட்டு மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

# சம்பளத்தை நாணயங்களாக வழங்கிய முதலாளி

நபர் ஒருவர் தன்னிடம் பணிபுரிந்த முன்னாள் ஊழியர் ஒருவருக்கு எண்ணெய்ப் பிசுபிசுப்புள்ள நாணயங்களை சம்பளமாக வழங்கிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அண்ட்ரியாஸ் ஃப்ளாட்டன் என்னும் குறித்த ஊழியர் தான் இறுதியாகச் செய்த வேலைக்கான சம்பளத்தை தனது முதலாளி கொடுக்கவில்லையென அமெரிக்க மனிதவள அமைச்சிடம் புகார் அளித்துள்ளார்.



இதனால் கோபமுற்ற வாகனம் பழுது பார்க்கும் கடை முதலாளியான மைல்ஸ் வாக்கர், எண்ணெய்ப் பிசுபிசுப்புள்ள நாணயங்களை ஃப்ளாட்டனின் வீட்டு வாசலில் கொட்டிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஊழியர் சட்டத்தை மீறியதாக, வாக்கர் மீது அமைச்சு வழக்குத் தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 18 ஜனவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.